

தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'சுயசான்று அடிப்படையில் உடனடி கட்டிட ஒப்புதல்' என்ற முன்னோடி திட்டத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பிளாட் ப்ரோமோட்டர்ஸ் அசோசியேஷன் சென்னை சவுத் தாம்பரம் சங்க தலைவர் கோமதி சங்கர், துணை தலைவர் கோபி, செயலாளர் தினேஷ், பொருளாளர் ஐ.வினோத் சிங் ஆகியோர் சந்தித்து சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தனர். உடன் அமைச்சர்கள் சு.முத்துசாமி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் உள்ளனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (25.07.2024) திண்டுக்கல் மாவட்டம், பழனி, பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் உள்ளனர்.

### பள்ளிக் குழந்தைகளைக் காப்பாற்றி - பின்னர் தன்னுயிர் நீத்த

# வாகன ஓட்டுநர் சேமலையப்பன் குடும்பத்துக்கு ரூ. 5 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 27–**

**பள்ளிக் குழந்தைகளை காப்பாற்றி பின்னர் தன்னுயிர் நீத்த தனியார் பள்ளி வாகன ஓட்டுநர் சேமலையப்பன் அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளிப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவிலில் உள்ள தனியார் பள்ளியில் வாகன ஓட்டுநராக பணிபுரிந்துவந்த காங்கேயம், சத்யா நகரைச் சேர்ந்த திரு.சேமலையப்பன் (வயது 49) என்பவர் 24.07.2024 அன்று மாலை பள்ளி முடிந்தவுடன் பள்ளிக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு கோவை - திருச்சி நெடுஞ்சாலை வெள்ளக்கோவில் பழைய காவலர் குடியிருப்பு அருகே வந்துகொண்டிருந்தபோது தனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால் உடனடியாக தான் ஓட்டிவந்த பள்ளி வாகனத்தில் இருந்த பள்ளிக் குழந்தை களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாத வகையில் பத்திரமாக நிறுத்தி பின்னர் உயிர் நீத்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்த நிலையிலும் தன் பொறுப்பிலிருந்த பள்ளிக் குழந்தைகளின் விலைமதிப்பில்லாத உயிர்களை காப்பாற்றி பின்னர் தனது இன்னுயிரை இழந்த சேமலையப்பன் அவர்களின் கடமை உணர்ச்சியையும் தியாக உள்ளத்தையும் நாம் தலைவணங்கி போற்றுகிறோம்.

காலம் சென்ற பள்ளி வாகன ஓட்டுநர் திரு. சேமலையப்பன் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த திரு. சேமலையப்பன் அவர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் ஐந்து இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கார்கில் போர் வெற்றியின் வெள்ளி விழா!

# ஈடு இணையற்ற துணிச்சலுடன் - நமது நாட்டைக் காத்த வீரர்களின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப்பதிவு!



சென்னை, ஜூலை 27–

கார்கில் போர் வெற்றியின் வெள்ளி விழா நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு–

**கார்கில் போர் வெற்றியின் வெள்ளி விழா நாளில், ஈடுஇணையற்ற துணிச்சலுடன் நமது நாட்டைக் காத்த வீரர்களின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றுகிறோம்!**

**நமது சுதந்திரத்தைக் காப்பதில் அவர்களின் வீரத்தையும் அர்ப்பணிப்பையும் மறவாது நினைவு கூர்வோம்!**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டின் இரயில்வே திட்டப்பணிகளுக்கு

# நிலம் கையகப்படுத்துவதில் - எவ்வித கால தாமதமும் இல்லை!

## ஒன்றிய அரசுக்கு விரிவான ஆதாரங்களுடன்

## வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் விளக்கம்!

**சென்னை, ஜூலை 27-**

**தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இரயில்வே திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளில் எவ்வித காலதாமதமும் இல்லை - என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் இரயிவே திட்டங்களுக்குத் தேவையான நிலங்களை நில எடுப்பு செய்வதில் மாநில அரசு காலதாமதம் செய்து வருவதாக ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் தெரிவித்துள்ளதாக சில நாளிதழ்களில் செய்தி வெளியாகியுள்ளது தொடர்பாக கீழ்கண்ட விபரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 2021- மே மாதம் முதல் தமிழகத்தில் ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட இரயில்வே திட்டங்களின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த இரயில்வே திட்டங்களுக்கான நில எடுப்பு பணிகளின் மீது தனிகவனம் செலுத்தி விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் இரயில்வே திட்டங்களுக்கு மொத்தமாக 2443 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய ஏற்கனவே தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவற்றுள், தூத்துக்குடி-மதுரை (வழி- அருப்புக் கோட்டை) புதிய அகல ரயில் பாதை திட்டத்திற்காக 937 ஹெ ஹெக்டேர் நிலங்களும், திருவண்ணாமலை-திண்டிவனம் புதிய அகல ரயில்பாதை திட்டத்திற்கு 276.00 ஹெக்டேர் நிலங்களும், ஈரோடு மாவட்டத்தில், கதிசக்தி பல்முனை மாதிரி சரக்கு முனையம் அமைக்க 13.00 ஹெக்டேர் ஆக மொத்தம் 1226.00 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய ஏற்கனவே தமிழ்நாடு அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒன்றிய இரயில்வே துறையினரால் நில எடுப்பிற்கு நிதி ஒதுக்கப்படாததாலும், நில எடுப்புப் பணியிடங்களுக்கான இசைவு வழங்கப்படாததாலும் அப்பணிகள் அனைத்தும் முற்றிலும் முடங்கியுள்ளன.

இதைத் தவிர, எஞ்சியுள்ள நில எடுப்பு செய்யப்பட வேண்டிய 1216.00.00 ஹெக் நிலங்களில் திண்டிவனம்- நகரி அகல ரயில் பாதை, திருவண்ணாமலை திண்டிவனம் அகல ரயில்பாதை, மதுரை- தூத்துக்குடி அகல ரயில் பாதை, மணியாச்சி- நாகர்கோவில் அகல ரயில்பாதை, திருவனந்தபுரம்- கன்னியாகுமரி அகல ரயில்பாதை, தூத்துக்குடி- மதுரை (வழி- அருப்புக்கோட்டை) புதிய அகல ரயில்பாதை, சின்னசேலம்- கள்ளக்குறிச்சி புதிய அகல ரயில் பாதை, மொரப்பூர்- தர்மபுரி புதிய அகல ரயில்பாதை, கொருக்குப்பேட்டை- எண்ணூர் நான்காவது வழித்தடம், செங்கல்பட்டு- விழுப்புரம் அகல ரயில்பாதை, கதிசக்தி பல்முனை மாதிரி சரக்கு முனையம், மயிலாடுதுறை- திருவாரூர் அகல ரயில்பாதை, பட்டுக்கோட்டை நான்குமுனை சந்திப்பு, மன்னார்குடி-நீடாமங்கலம் அகல ரயில்பாதை, சென்னை கடற்கரை- கொருக்குப்பேட்டை மூன்றாவது நான்காவது வழித்தடம், மற்றும் விழுப்புரம்- திண்டுக்கல் அகல இரயில்பாதை ஆகிய திட்டங்களுக்கு 907.33 ஹெக்டேர் நிலங்களுக்கான நில எடுப்புப் பணிகள் முடிவுற்று (அதாவது 74% சதவீதம்) நிலம் இரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

**முக்கியத் திட்டங்கள்**

குறிப்பாக முக்கியத் திட்டங்களான திண்டிவனம்- நகரி அகல ரயில்பாதை (97%), மதுரை- தூத்துக்குடி அகல ரயில் பாதை (96%), மணியாச்சி- நாகர்கோவில் அகல ரயில்பாதை (100%), சின்னசேலம்- கள்ளக்குறிச்சி புதிய அகல ரயில்பாதை (81%), கொருக்குப்பேட்டை- எண்ணூர் நான்காவது வழித்தடம் (87%), மயிலாடுதுறை- திருவாரூர் அகல ரயில்பாதை (70%), பட்டுக்கோட்டை நான்குமுனை சந்திப்பு (100%), மன்னார்குடி- நீடாமங்கலம் அகல ரயில்பாதை (100%), சென்னை கடற்கரை- கொருக்குப்பேட்டை மூன்றாவது நான்காவது வழித்தடம் (100%), மற்றும் விழுப்புரம்- திண்டுக்கல் அகல இரயில்பாதை (100%) ஆகிய திட்டங்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ளவாறு 81% முதல் 100% வரை நிலம் எடுப்புப் பணிகள் முடிக்கப்பட்டு ஒன்றிய இரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. எஞ்சிய நிலம் எடுப்புப் பணிகளை விரைந்து முடிக்க முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இரயில்பாதை அமையவுள்ள அரசு புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரையில், மேற்படித் திட்டங்களைச் செயல்படுத்த எந்தவிதமான தடைகளும் இன்றி அவ்வப்போது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

**சென்னை – கடற்கரை முதல் சென்னை– எழும்பூர் ரயில்நிலையம் வரையிலான நான்காவது வழிப் பாதை அமைத்தல்.**

இந்த வழித்தடத்தில் உள்ள கூவம் ஆறு மற்றும் பக்கிங்காம் கால்வாயை ஒட்டிய நீர்வழிப்புறம்போக்கில் 2875 ச.மீ நிலங்களை மேற்படித் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளத் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வழித்தடத்தில் உள்ள இதர அரசு புறம்போக்கில் 383.5 ச.மீ நிலங்களை இரயில்வே துறைக்கு நில மாற்றம் செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1823.87 ச.மீ நிலம் பாதுகாப்பு அமைச்சகத்தின் நிலம் என்பதால் அதன் ஒப்புதலுக்காகவும், 278.0 ச.மீ நிலம் இந்திய ரிசர்வ் வங்கியின் நிலம் என்பதால் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுக்காகவும் நிலுவையில் உள்ளது. இந்நேர்வில் மேற்குறிப்பிட்டுள்ள மத்திய அரசு நிறுவனங்களுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இரயில்வே துறைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இராமேஸ்வரம்– தனுஷ்கோடி இடையிலான புதிய இரயில்தடம் அமைக்கும் திட்டம்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம்- தனுஷ்கோடி இடையிலான புதிய இரயில் தடம் அமைக்கும் திட்டம், சுற்றுலாவினை மேம்படுத்தும் வகையில் 2022ம் ஆண்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், சுற்றுச் சூழல் வல்லுநர் குழுவின் அறிக்கையில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவது சுற்றுச் சூழல் சமநிலையை பாதிக்கும் என்பதால், சுற்றுச் சூழல் பாதிப்பினை கருத்தில் கொண்டு மேற்படி வழித் தடத்தடமானது புதிய இரயில்வே பாதை அமைக்க உகந்தது அல்ல என்று மேற்படி இரயில் பாதைத் திட்டத்தினைக் கைவிடும்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், பாரதப் பிரதமர் அவர்களிடம் (Memorandum- Dated: 08.04.2023) கோரப்பட்டது.

இந்நிலையில் தேசிய நெடுஞ்சாலை முதன்மைப் பொறியாளரின் அறிக்கையின் அடிப்படையில் சுற்றுலாவினை மேம்படுத்தும் வகையில், முகுந்தராயர் சத்திரம் முதல் அரிச்சல்முனை வரையிலான 9.5 கி.மீ தொலைவிற்கு சாலை அமைக்கப்பட்டு போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளது. எனவே சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைக்கப்படவிருந்த மேற்படி இரயில் பாதைத் திட்டத்தை கைவிட பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே, தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இரயில்வே திட்டங்களுக்கான நில எடுப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் போக்குவரத்துத் துறை அரசு செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தலைமையில் சம்பந்தப்பட்ட இரயில்வே துறை அதிகாரிகள் மற்றும் நில எடுப்பு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இதுதவிர, அவ்வப்போது தலைமைச் செயலாளர் தலைமையிலும் மாவட்ட ஆட்சியர்களுடன் இரயில்வே நில எடுப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, இரயில்வே திட்டங்களுக்கான நில எடுப்பு பணிகளை பொறுத்தவரை இவ்வரசு தனிகவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் அவற்றை முடிக்கும் வகையில் விரைந்து செயலாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரம்

## 27 மற்றும் 40வது வட்டச் செயலாளர் பொறுப்புகளுக்கான தேர்தல்!

## தேர்தல் முடிவு

"விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், 4வது பகுதிக்குட்பட்ட 27வது வட்டக் கழகச் செயலாளர் ராமராஜ் தனது பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதாலும் 6வது பகுதிக்குட்பட்ட 40வது வட்டச் செயலாளர் அ.சண்முகம் அவர்கள் வயது மூப்பின் காரணமாக செம்மையாக கழகப் பணியாற்ற முடியாத காரணத்தால் அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவதாலும்; சிவகாசி மாநகரம், 4வது பகுதி, 27வது வட்டச் செயலாளர் மற்றும் 6வது பகுதி, 40வது வட்டச் செயலாளர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், 4வது பகுதி, 27வது வட்டக் கழகச் செயலாளர் பொறுப்புக்கு மு.சந்திரசேகர் அவர்கள் மட்டும் மற்றும் 6வது பகுதி, 40வது வட்டக் கழகச் செயலாளர் பொறுப்புக்கு ப.பி.விக்னேஷ்குமார் அவர்கள் மட்டும் வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரத்திற்குட்பட்ட**

**4வது பகுதி, 27வது வட்டக் கழகச் செயலாளராக**
**மு.சந்திரசேகர்,** எண்.41பி, காமராசர் ரோடு, ஸ்டேட் பாங்க் காலனி,
சிவகாசி-626 124 விருதுநகர் மாவட்டம் **அவர்களும்;**

**6வது பகுதி, 40வது வட்டக் கழகச் செயலாளராக**
**ப.பி.விக்னேஷ்குமார், பி.ஏ.** எண்.104, தில்லை சிதம்பரம் தெரு,
சிவகாசி-626 123, விருதுநகர் மாவட்டம்
**அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்!

## தேர்தல் முடிவு

"விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகர பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகர பொருளாளர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 **ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக** செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரக் கழக பொருளாளர் பொறுப்புக்கு ரா.வெள்ளைத்துரைப்பாண்டியன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**விருதுநகர் வடக்கு மாவட்டம்,**
**சிவகாசி மாநகரக் கழகப் பொருளாளராக**

**ரா.வெள்ளைத்துரை பாண்டியன்,** எண்.111, பாண்டியன் நகர் 5வது தெரு, திருத்தங்கல், சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டம் **அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.